# 60 வயது பூர்த்தியான அண்ணுவுக்காக பிரார்த்தனை

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 218
தேசிய தினசரி

சார்த்திகரணம் (?) ஆவணி 31 ஜூலை 88 திங்கட்கிழமை (16-9-68)

## ஏழை மக்களுக்கு அன்னதானம்

சென்னை, செப். 15

இன்று தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரையின் பிறந்தநாள் தமிழகமெங்கும் கொண்டாடப் பட்டது. இன்றுடன் அவருக்கு 60 வயது பூர்த்தியாகிறது.

தி. மு. க. பிரமுகர்களும் அனுதாபிகளும் விசேஷமான முறையில் பிறந்த நாளைக் கொண்டாடா விட்டாலும் அமைதியான முறையில் அண்ணுவுக்கு வாழ்த்துக் தெரிவித்துக் கொண்டார்கள். நியூயோர்க்கில் அறுவை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திரு. அண்ணுதுரைக்கு விரைவில் குணமேற்பட வேண்டுமென்று தமிழகத்திலுள்ள கோவில்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மசூதிகளிலும் பிரார்த்தனைகளும் நடைபெற்றன. பல இடங்களில் ஏழை மக்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் நியூயோர்க்கிலிருந்து கிடைத்த

[8-ம் பக்கம் பார்க்க]

# மந்திரி சபையில் புதிய மாற்றம்?

## பிரேமதாசா அமைச்சராகலாம்;

### பிரதமரின் பதவியொன்று அமரதுங்காவுக்கு?

கொழும்பு, திங்கள்

மந்திரிசபையில் இன்று புதிய மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ராஜினுமா செய்ததென்ற முடிவைத் தொடர்ந்தே மந்திரி சபையில் மாற்றம் ஏற்படவிருக்கிறது.

தற்போது பிரதமரிடமிருக்கும் ஒலிபரப்பு தகவல் அமைச்சு பொறுப்பை சொருனாரதிலிட்ட உதவி அமைச்சர் செனட்டர் திரு ஜே. ஏ. அமரதுங்காவிடம் ஒப்படைத்து அவரை தகவல் ஒலிபரப்பு அமைச்சராக நியமிக்க பிரதமர் முடிவுசெய்திருப்பதாகவும் உதவி உள்ளூராட்சி அமைச்சரான திரு. ஆர். பிரேமதாச உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்படலாமெனவும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

# “தமிழ் இனம் ஏமாருது”

## திருவின் ராஜினுமா கடிதம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆட்சி நடத்தும் எந்தப் பெரும்பான்மைக் கட்சியுடனும் தமிழ் மக்கள் ஒருபோதும் சேரக்கூடாது என்பதை நீங்களும் நிரூபித்து விட்டீர்கள் என்ற கருத்துப்பட அமைந்த கடிதமொன்றை திரு. திருச்செல்வம் பிரதமரிடம் கையளித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை முடிவைத் தொடர்ந்து திருச்செல்வம் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ள ராஜினாமாக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் அமைக்க மாவட்டசபை மசோதாவை மையமாக வைத்து செய்யப்பட்ட பேச்சுவார்த்தை முதல்கொண்டு ஆதியோடு அந்தமாக இதுவரை நடைபெற்ற அத்தனையையும் திருச்செல்வம் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மைச் சமூக

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘இப்போதுள்ள நிலையில் காங்கிரஸ் வெளியேருது’

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழ்க் காங்கிரஸ்கட்சி வெளியேறவேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை என்று காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் இன்ருலை தெரிவித்தார். எங்கள் இலட்சியங்களில் முக்கியமான இராமநாதன் பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமாக அரசாங்கத்திடம் உறுதியான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பதில் விரைவில் கிடைக்குமென்றும் எதிர் பார்க்கிறோம் என்று கூறிய அந்தப் பிரமுகர், அதன் பின்னரே காங்கிரஸ் செயற்குழு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராயுமென்ருர்.

இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்திலிருந்து காங்கிரஸ் வெளியேறவேண்டிய அவசியமில்லை என்று கூறியதுடன் மந்திரிப்பதவி எதையும் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளமாட்டாது என்றும் அவர் சொன்னுர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

# தமிழரசார் முடிவு பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சிறிமா



கொழும்பு, ஞாயிறு

“அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதென செய்துள்ள முடிவு நாட்டுமக்களை ஏமாற்றி அடுத்த தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சிக்கு வருவதற்காக திரு. டட்லியும் திரு. செல்வநாயகமும் முன்னேற்பாட்டின் படி செய்து கொண்டுள்ள ஒரு நடவடிக்கை, திரு: டட்லியும் திரு. செல்வநாயகமும் செய்து கொண்டுள்ள மற்ருெரு இரகசிய ஒப்பந்தப் படியான நடவடிக்கையாகவும் இது இருக்கலாம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க் கட்சிக் கூட்டணித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா தெரிவித்திருக்கிருர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘இனியாவது தமிழ் இனத்துக்காக ஒன்றுபடுவோம்’

## நெடுந்தீவில் ஜி. ஜி.

நெடுந்தீவு ஞாயிறு

“தமிழ் மக்களுக்குப் பெரும் ஆபத்து சூழ்ந்துள்ள இந்த நேரத்திலாவது சொந்த விருப்பு வெறுப்புக்களையும், கட்சிநலன்களையும் விடுத்து தமிழ் இனத்தின் நலனுக்காக உழைக்க ஒன்று சேர்ந்து, ஒரு பொதுத்திட்டம் வகுத்து செயல்படுவோம்” என்று தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று மாலை நெடுந்தீவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தமிழரசுக்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இருபதாம் நூற்றாண்டிலேயுங்கூட நெடுந்தீவு மக்கள் போக்குவரத்துக் கஷ்டத்தாலும் குடிதண்ணீர் கஷ்டத்தாலும் அல்லற்படுவதைக் கண்டு மிகவும் கவலைப்படுவதாக கூறிய திரு. ஜி. ஜி. இவைபற்றி ஆட்சி மன்றத்தில் எடுத்துக்கூறி இக்கஷ்டங்களை நீக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினுர்.

தமிழர்களுக்கிடையே ஒற்றுமை இருக்கவேண்டுமானுல் நாம் எதிர்வரும் ... செய்யவேண்டும் ... எனக் கூறிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒருமாத காலத்திற்குள் இத்தீவு மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார். திரு. மு. சிவசிதம்பரம், திரு. என். ஆர். சிவஞானம் ஆகியோரும் பேசினர்.

மொழிஉரிமை மற்றும் தமிழ் இனத்தின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கு பொதுக் கொள்கைத்திட்டம் வகுக்கலாம் என்றும் திரு. பொன்னம்பலம் கூறி ... மற்றும் பலரும் பேசினர்.

## பதவி துறக்கும் ‘திரு’

யாழ்ப்பாணம், திங்கள்

“தமிழர்கள் தமக்குள் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டு, பிளவுபட்டு நிற்பதை விடுத்து, கடந்தகால சம்பவங்களை மறந்து இனியாவது ஒற்றுமையாக முன்னேற்றத்துக்காக உழைப்போம்”

இவ்வாறு அமைச்சர் பதவியை ராஜினுமாச் செய்ததற்காக இன்று நண்பகல் புறப்பட்டுச் செல்லும் திரு. எம். திருச்செல்வம், கொழும்பு புறப்படுமுன் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

### இதுகட்சி பிரச்னையல்ல

திருக்கோணேசுவரம் பகுதியை புனிதநகராகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் அது பற்றி ஆராய்வதற்கு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டதும், இந்தக் கமிஷனின் நடவடிக்கைகளை நிறுத்திவைக்க பிரதமர் உத்தரவிட்டதும் தமிழரசுக்கட்சியின் பிரச்னை மட்டுமல்ல. இது தமிழர் பிரச்னை. தமிழருக்கு செய்யப்பட்ட அவமானம். இனியும் இந்த அரசா

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு பட்டணசபை
## கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவரால், 1968-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ந் திகதி ந. ப. 12-00 மணி வரை பின்வரும் வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விப் பத்திரப் பணம். | கட்டுப் பணம். |
|---|---|---|
| 1. கோவில்வீதிக்குத் தார் போடுதல் 2-ம் தடவையாக | 5-00. | 25-00 |
| 2. ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் வடிகால் அமைத்தல். | 5-00 | 50-00 |

அ. சந்தியாப்பிள்ளை
தலைவர்,
பட்டணசபை, முல்லைத்தீவு.

பட்டணசபை அலுவலகம்,
முல்லைத்தீவு. 11-9-1968.
984

## அறிவித்தல்

திருக்கேதீச்சரத்திலுள்ள புனித பாலாவித் தீர்த்தக் கரையில் வைத்து அந்தியேட்டி செய்யவிருக்கும் அன்பர்களின் வசதிக்காக நிரந்தரமாக ஒரு சைவக் குருக்களை நியமித்துள்ளோம் என்பதையும் அந்தியேட்டிக்கு ஆகவேண்டிய எல்லா ஒழுங்குகளும் திருக்கேதீச்சரத்திலேயே வசதியோடு ஒழுங்குசெய்து தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
திருக்கேதீச்சர
தேவஸ்தானம்,
திருக்கேதீச்சரம்.

12 9-68 982

நெடுந்தீவில்

## குடிதண்ணீர் விநியோகம்

நெடுந்தீவு, ஞாயிறு

குழாய்மூலம் குடிதண்ணீர் விநியோகம் இல்லாத இடங்களுக்கு சமூகசேவை இலாகா சொந்தமாகத் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை நெடுந்தீவில் ஆரம்பித்துள்ளது. கடந்த சில வாரங்களாக நெடுந்தீவில் சிலபகுதி மக்கள் அனுபவித்து வந்த குடிதண்ணீர் கஷ்டம் ஓரளவு தீர்ந்துள்ளது.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

முதலாம் குறுக்குத் தெருவையும், பாங்சோல் வீதியையும், பீச் ரோட்டையும் எல்லைகளாகக்கொண்ட 6 பரப்புக் காணி மேல்மாடிக் கட்டிடத்துடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் எடுக்கலாம். விபரங்களுக்கு வே. பொன்னம்பலம், இல. 57, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 123

நவராத்திரி கவிகளுடன் தேவிபிரசாத்தனைக்கு தேவி தோத்திரத்திரட்டு 25 சதம். அபிராமியந்தாதி 60 சதம். சகலகலாவல்லிமாலை 10 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை-யாழ்ப்பாணம். 202

பருத்தித்துறை நகரின் மத்தியில் தும்பளை ரோட்டுப் பக்கமாக தெருமூடி மடத்தின் அருகாமையாக உள்ள 5 பரப்பு நிலம் 4 அறைகள் கொண்ட வீட்டுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- பருத்தித்துறைக் கோர்ட்டுப் புறக்ரர் திரு. சி. செல்லையா அவர்களுடன் தொடர்பு கொள்க. 208

### தேவை

தேவன்ஸ் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை நேரில் வரவும் தேவன்ஸ் இண்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 207

### காணவில்லை

13-9-68 திகதியில் நல்லூர் கோவிலால் வரும்போது கறுப்பு சேட்டும் கண்ணுக்குப் போடும் கண்ணாடியும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து "ஈழநாடு" காரியாலயத்தில் கொடுக்கும்படி கேட்கிறேன். 206

### வாடகைக்கு

வீடு:

நவீன வசதிகளுடன் பருத்தித்துறையில் வீடு வாடகைக்கு உள்ளது. சிவசாமிப்பிள்ளை, மாணிக்கவாசா, மின்சாரநிலைய வீதி, பருத்தித்துறை. 98

## யாழ்ப்பாண மாநகரசபை
### சோலைவரி
### 3—ம் கந்தாயம்—1968

1968-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம், 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும். குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% மேலதிகத் தண்டப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-9-68-ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். அவ்விதம் பணம் அனுப்பும்பொழுது வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

க. பேரம்பலம்,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11-9-68. 986

## மிருசுவில் கிராமசபை
## கேள்வி விளம்பரம்

வரம்பகம் வேதக்காசல் ரோட் வெள்ள நிவாரண நிதி வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி வேலைக்கு 19-9-68 காலை 9 மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசு ரூபா 25/-ம் பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 17-9-68 பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயத்திலும் மிருசுவில் கிராமசபைக் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

சி. பாலசிங்கம் J. P.
அக்கிராசனர்,
மிருசுவில் கிராமசபை.
985

கொழும்புத்துறைக் கலாசாலை

# இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 39 பேர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயின்று கடந்த ஆண்டு இறுதிப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த 39 பேர்களும் வருமாறு:-

அந்தோனிமுத்து அடைக்கலம், பாலசுப்பிரமணியம் ஐயாமுத்து, செல்லையா கந்தையா, கிறிஸ்தியன் மனுவேல்தம்பி, எற்வேட் விரசிங்கம் சாலஸ், பிரான்சிஸ் சேவியர் ஜியூபேட், ஞானசுந்தரம்விசுவலிங்கம். இயேசுநாயகம் சீமான், கனகரத்தினம் நாகமுத்து, கனகரத்தினம் கப்பர், கணபதிப்பிள்ளை கார்த்திகேசு, கந்தையா தம்பிப்பிள்ளை, கதிர்த்தம்பி புண்ணியமூர்த்தி, குகதாசன் முருகேசு, இலட்சுமணன் முத்தையா, முருகேசு இராமலிங்கம், நடேசபிள்ளை சந்திரசேகரம், பாக்கியநாதர் மனுவேற்பிள்ளை, இராசரத்தினம் சுவாமிபிள்ளை, இராசையா கந்தையா, இரத்தினலிங்கம் ஏரம்பு, செபஸ்தியாம்பிள்ளை பச்சேக்கு ஞானமணி, செபமாலை அந்தோனிப்பிள்ளை, சிவரத்தினம் சுப்பிரமணியம் கந்தையா, சிவப்பிரகாசம் முத்தையா, சோமசுந்தரம் கந்தையா, சூரியன் முருகன் கந்தன், சுப்பிரமணியம் ஆழ்வாப்பிள்ளை, சுப்பிரமணியம் வயித்திலிங்கம், சுந்தரலிங்கம் செல்லத்துரை, தனபாலசிங்கம் செல்லையா, தர்மலிங்கம் சந்திரவனம், தருமலிங்கம் நாகநாதர், தில்லைநாயகம் பொன்னம்பலம். திருநாவுக்கரசு அருணாசலம், தியாகராசா சின்னப்பிள்ளை, தியாகராசா வேலுப்பிள்ளை, விஜயகுமூர்த்தி சுந்தரம் விவேகானந்தசாமி இராமகிருஷ்ணசாமி. தேதி

## சுன்னாகத்தில் பாரதி விழா

உடுவில், ஞாயிறு

"தன் இனத்துக்காக, மொழிக்காக, விடுதலைக்காக எவ்வளவுதூரம் பாரதி பாடுபட்டாரோ அதேயளவு அயல் நாட்டவரையும் அவர்கள் மொழியையும் போற்றினார். எனவேதான் பாரதி இந்நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்கிறார்" என சுன்னாகம் பட்டினசபையின் ஆதரவில் நூல் நிலைய ஆலோசனைக் குழுவினர் நடத்திய பாரதி விழாவில் பேசிய "நாவேந்தன்" கூறினார்.

நூல் நிலைய கரபந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திரு. எஸ். பெரியதம்பி தலைமைவகித்தார்.

சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில், சிங்கள-தமிழ் இனத்தவரிடையே அடிப்படையில் உரிமை ஒன்றென்ற உண்மை உணரப்பட்டால் நாட்டில் ஐக்கியமும் சுபீட்சமும் ஏற்படும் என்றார்.

## "இப்பொழுதாவது உணர்ந்து கொண்டதே"

### ஊர்காவற்றுறை எம். பீ. கருத்து

நல்லூர், திங்கள்

தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது சம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் அபிப்பிராயம் தெரிவிக்கையில் இந்த நேரத்திலாவது தமிழரசுக்கட்சியின் தலைமைபீடம் நான் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ந் திகதி கூறியவழியைப் பின்பற்றி அரசாங்கத்தைவிட்டு வெளியேறமுடிவுசெய்திருப்பதையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்' என்று கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆலோசனையை இவர்கள் அன்று ஏற்றுக்கொண்டிருப்பார்களானால் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய மிகமுக்கியமான பல விவகாரங்களில் நாம் சரணாகதியடையவேண்டியநிலை ஏற்பட்டிருக்காது. கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் இதைத்தான் தமிழரசுக் கட்சி செய்திருக்கின்றது. அத்துடன் யு. என். பி.-த. அ. க. ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது திரு. செல்வநாயகத்தின் செல்வாக்கில் இயங்கிவந்த தமிழரசுக்கட்சித் தலைமைப்பீடம் இரு கனவான்களால் கொடுக்கப்பட்ட ஆலோசனையை ஏற்று கட்சி நிலைமையை முற்றாக மறந்ததை கண்டிக்கத்தக்க தொன்றாகும்.

எப்படியிருந்த போதிலும் ஒரு கட்சி சமீபகால முறையில் எக்காரணத்தைக் கொண்டும் காலந்தாழ்ந்தாகுதல் ஒரு நல்ல முடிவை எடுக்குமானால் அதனை நாம் வரவேற்கவேண்டும். இதனால் தமிழரசுக்கட்சி பின்னரும் சரணாகதிக்கு ஆளாக வேண்டியநிலை இல்லாமல் போய்விடுகிறது.

கோணேசர் ஆலயம் அமைந்த பகுதியும் அதன் சுற்றுப்புறமும் பழமையான மறக்கமுடியாத சம்பவங்களைக்கொண்டது. அதனை நாங்கள் நிர்வகிக்கவும் தமிழ்பேசும் மக்களின் ஆட்சிக்குக்கீழ் கொண்டுவரவும் செய்யவேண்டிய வற்றை செய்யவேண்டும்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்) — விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

கலைப்பேரரசர்
எம். ஜி. ராமச்சந்திரன்
கன்னடத்து பைங்கிளி
சரோஜாதேவி
கே. ஆர். விஜயா - மனோகர் - நாகேஷ்



நடித்த
# நான் ஆணையிட்டால்

இங்ஸ்லி (கொழும்பு)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
நான்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
சோமாதினங்களில் 2-30
சிவாஜி — சாவித்திரி
நடித்த
கைகொடுத்த தெய்வம்

5-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM. ராஜன் - புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Michael Caine
in
ALFIE
(ADULTS ONLY)

82-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பகுதிகளை மீட்பதற்கு முழுச்சக்தி

## ஐ. அ. கு. மக்களிடம் நாஸர் வேண்டுகோள்

கெய்ரோ, செப். 15

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களை மீட்பதில் ஐக்கிய அரபுக் குடியரசு மக்கள், தமது முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டும் என்று ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கெய்ரோவில் நேற்று நடைபெற்ற அரபு சோஷலிஸ்ட் யூனியன் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு நாட்டுமக்களிடம் விண்ணப்பித்துக்கொண்டார்.

அண்மையில் சிகிச்சைக்காக ரஷ்யா சென்று திரும்பிய பிறகு, நாஸர் ஆற்றியுள்ள முதலாவது பகிரங்கப் பேச்சு இதுவேயாகும்.

புதிய போர் நடவடிக்கை எதையும் உடனடியாக ஐ. அ. கு. எடுக்கப்போவதற்கான அறிகுறி எதுவும் நாஸரின் உரையில் தொனித்ததாகத் தெரியவில்லையென்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அல்ஜியர்ஸ் மாநாடு

அல்ஜியர்ஸ், செப். 15

அல்ஜியர்ஸில் கூடியுள்ள ஆபிரிக்க ஒற்றுமைச்சங்க மாநாடு, முக்கியமான பிரச்னைகளைத் தொடர்ந்து ஆராய்ந்துள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஆபிரிக்க நாடுகளை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னை, நைஜீரிய உள்நாட்டுப்போரை ஒரு சமரச முடிவுக்குக் கொண்டு வருவதேயாகும்.

மாநாட்டின் ஆரம்பவிழாவில் கலந்துகொண்ட ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதான்ட், நாளை நியூயோர்க் திரும்புவுள்ளார். நியூயோர்க் செல்லும் வழியில், மேற்கு ஆபிரிக்காவில் ஐ. நா. விஷேச பிரதிநிதியாகக் கடமையாற்றும் டாக்டர் குன்னர் ஜாரிங்கை அவர் சந்தித்துப் பேசுவார்.

மாநாட்டுக்கு வந்துள்ள ஸாம்பியாத் தலைவர் டாக்டர் கவுண்டா தாயகம் திரும்புமுன், பாரிஸ்சென்று பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலைச்சந்தித்துப் பேசுவார் என்றும் மாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## 5 வார்ஸோ நாடுகளை ஒலிம்பிக்விளையாட்டுகளிலிருந்து விலக்குமாறு கோரிக்கை

ஒஸ்லோ, செப். 15

அடுத்த மாதம் மெக்ஸிக்கோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுகளிலிருந்து செக்கோஸ்லோவாக்கிய ஆக்கிரமிப்பில் பங்குபற்றிய ஐந்து வார்ஸோ ஒப்பந்த நாடுகளையும் விலக்கிவிடுமாறு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியை நோர்வே ஒலிம்பிக் கமிட்டி கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த ஐந்து நாடுகளான சோவியத் ரஷ்யா, போலந்து ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, பல்கேரியா இவற்றுக்கு அனுப்பிய அழைப்புகளைத் திருப்பிப் பெறுமாறு நோர்வே ஒலிம்பிக் கமிட்டி, சர்வதேச ஒலிம்பிக்கமிட்டியிடம் விண்ணப்பித்துள்ளது.

இந்த ஐந்து நாடுகளுடனான எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் நோர்வே ஏற்கனவே ரத்துச்செய்து விட்டது.

## ரஷ்ய மந்திரியும் செக். பிரதமரும்

பிராக். செப். 15

செக்கோஸ்லவாக்கியப்பிரதமர் திரு. செர்னிக், நேற்று, நாட்டுக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய உதவி வெளியுறவு மந்திரி திரு. குஸ்னெட்ஸோவ்வைச் சந்தித்துப் பேசினார்.

இப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## சிரிய - இஸ்ரேல் துருப்புகள் மோதல்

டமாஸ்கஸ், செப். 15

இதற்கிடையில், சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸிலிருந்து வரும் செய்திகள், சிரிய - இஸ்ரேலிய எல்லையில், நேற்று ஒருமணி நேரத்துக்கு இருநாட்டுத் துருப்புகளுக்குமிடையே இயந்திரத் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகத் தெரிவிக்கின்றன.

இத்துப்பாக்கிச் சண்டை, 44 மணிநேரத்தில் நடந்த நடந்த இரண்டாவது மோதலாகும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தைமுதலில் ஆரம்பித்ததுபற்றி இருசாராரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆட்சேதம் எதுவும் இருபக்கத்திலும் அறிவிக்கப்படவில்லை.

## பிரிட்டனுடன் பேச்சு நடத்த ஸ்மித் தயாராம்

சலிஸ்பரி, செப். 15

ரொடீஷியாவின் சட்டவிரோத ஆட்சியின் பிரதமரான திரு. அயான் ஸ்மித், பிரிட்டனுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கத்தாம் தயாராக விருப்பதாகத் தெரிவித்துள்ளார்;

ஆனால், இத்தகைய பேச்சுவார்த்தைகள், ரொடீஷியாவின் அரசியற் சாஸன ரீதியான உரிமைகளை எவ்வகையிலும் பாதிக்க அனுமதிக்க முடியாது என்றும் அவர்கூறினார்.

பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு திரு. அயன் ஸ்மித் முன்வந்துள்ளது பற்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காரியாலய பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், இது ரொடீஷியாவின் போக்கில் எவ்வித மாற்றத்தையும் குறிப்பிடுவதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார்

திரு. ஸ்மித் இவ்விதம் பேச முன் வந்திருப்பது புதிய விஷயமொன்றல்ல என்று மேலும் அவர் தெரிவித்தார்.

[7ம் பக்கம் பார்க்க]

## ரயில்வே விவகாரங்களில் தலையிடுவோர்க்குத் தண்டனை

### இந்திய அரசு பிறப்பித்துள்ள புதிய சட்டம்

புதுடில்லி, செப். 15

ரயில்வே விவகாரங்களில் குறுக்கிட்டுத் தடைசெய்பவர்கள் மீது தண்டனை விதிக்கும் விசேஷ சட்டமொன்றை இந்திய அரசாங்கம் பிறப்பித்துள்ளது. இச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வரும்.

ரயில்வே போக்குவரத்துக்கு எவ்வகையிலும் இடையூறு விளைக்கும் ரயில்வே ஊழியர்களோ அல்லது மற்றெவராயினும் சரி, இச் சட்டத்தின் கீழ், இரண்டு வருடச் சிறைத்தண்டனை அல்லது ரூபா 500 அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.

ரயில்களுக்கு முன்னால் சத்தியாக்கிரகம் செய்வது, வேலைக்குச் செல்வோரை தடைசெய்வது, ரயில்வே உடைமைகளைச் சேதப்படுத்துவது போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் பொலிசாரால் அல்லது ரயில்வே அதிகாரிகளால் விசாரணை எதுவுமின்றிக் கைதுசெய்யப்படுவதற்கு இச் சட்டம் வழிவகுக்கிறது.

முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் இச் சட்டத்தை சர்வாதிகாரமானதென்று வர்ணித்துள்ளனர்.

## சமஷ்டி நைஜீரியாவில் பிரெஞ்சு எதிர்ப்பு

### தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

லாகோஸ், செப். 15

சமஷ்டி நைஜீரியாவின் தலைநகரான லாகோஸில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரெஞ்சுத் தூதரகத்தின் முன்னால் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பிரிவினை பியாவ்ராவுக்குப் பிரான்ஸ் ஆதரவு தெரிவித்திருப்பதை ஆட்சேபித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

தூதரகத்தின் முன்னிலையில் வைத்து, பிரெஞ்சு மூவர்ணக்கொடியை ஆர்ப்பாட்டக்காரர் எரித்தனர்.

தூதரகத்தில் ஆட்சேபக் குறிப்பொன்றையும் அவர்கள் கையளித்தனர்.

பிரெஞ்சு அரசாங்கத்துடனான ராஜிய உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு கோரும் மகஜரொன்றையும் அவர்கள் சமஷ்டி நைஜீரியத் தலைவர் ஜெனரல் கோவனிடம் சமர்ப்பித்துள்ளனர்.

நைஜீரியாவிலுள்ள பிரெஞ்சுப் பொருளாதார நலன்கள் தேசியமயமாக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

## நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் வெற்றி பெறுமென இந்திரா நம்பிக்கை

## ‘இரு வல்லரசு முகாம்கள் தத்துவம் உலக அரங்கில் வலுவிழந்து விட்டது’

அலஹபாத், செப்.15

இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டுத்திட்டம், நாட்டுக்கு அமைதியையும் ஐக்கியத்தையும் அளிக்கும் வகையில் வெற்றியடையும் என்ற நம்பிக்கையை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்டுள்ளார்.

நேற்று, அலஹபாத்தில், மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையிலேயே, அவர் இவ்வாறுகூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஒத்துழைக்குமாறு மக்களைப் பிரதமர் வேண்டிக் கொண்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சேதங்களைச் சில வியாபாரிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பொருட்களின் விலைகளை உயர்த்தி மக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்குவதை அவர் வெகுவாகக் கண்டித்தார். இயற்கையாக ஏற்படும் அழிவுகளை யாராயினும் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளுவது சமூக விரோதக் குற்றமாகும் என்றார் திருமதி இந்திரா.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைபற்றி அவர் குறிப்பிடுகையில், வெளிநாடுகள் யாவற்றுடனும். இந்தியாவுக்கு விரோதமான நாடுகளுடன்பட, [illegible] மான உறவுகளை [illegible] கொள்ள முயல்வதே இந்தியாவின் நோக்கமாகும் என்றார்.

உலக அரங்கில், இருவல்லரசு முகாம்கள் என்ற தத்துவம் வலுவிழந்துவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார். அந்த முகாம்களே இப்போது ஒன்றுக்கொன்று நெருங்கி வந்துகொண்டிருப்பதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

தமது எதிர்வரும் தென்னமெரிக்க நாடுகள் விஜயம் குறித்துப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், அந்நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே நெருங்கிய தொடர்புகளுக்கு அது வழி [illegible] என்று [illegible] தெரிவித்தார்.

## மாஸ்கோ ஒப்பந்தம் அமுலாக்கப்பட வேண்டும்

### இலகுவான காரியமல்லவெனினும் முதற் கடமை அதுவேயாகும்

### செக். கம். தலைவர் டுப்செக்

பிராக், செப். 15

செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. டுப்செக், நாட்டினை எதிர்நோக்கியுள்ள முக்கிய கடமை, வழமையான நிலைமையை உருவாக்குவதும் உறுதிப்படுத்துவதுமேயாகும் என்று அறிவித்துள்ளார். நாட்டிலிருந்து அந்நிய துருப்புக்கள் வெளியேறச் சாதகமான நிலைமையும் உருவாக்க வேண்டியதவசியம் எனத் திரு. டுப்செக் கூறினார்.

செக். கோஸ்லவாக்கியாவின் சீர்திருத்தத்திட்டம் தொடர்ந்து அமுலாக்கப்படுவதானால், மாஸ்கோ ஒப்பந்தம் செயற்படுத்தப்படவேண்டும் என்றார். திரு. டுப்செக்.

நாட்டு மக்களுக்குத் திரு. டுப்செக் நேற்று விடுத்த வானொலி, டெலிவிஷன் ஒலிபரப்புச் செய்தியொன்றிலேயே இவ்விதம் குறிப்பிட்டிருந்தார்.

மாஸ்கோ ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல என்பதைத் திரு. டுப்செக் ஒப்புக் கொண்டார். ஆனால் அதே நேரத்தில், மாஸ்கோ ஒப்பந்தத்துக்கும் நாட்டின் அரசியற் சீர்திருத்தத்திட்டத்துக்குமிடையே முரண்பாடெதுவும் இருக்க வேண்டிய அவசியமுமில்லை என்று திரு. டுப்செக் குறிப்பிட்டார்.

மாஸ்கோ ஒப்பந்தத்துக்கு முன்னிருந்த நிலைமை நாட்டில் மீண்டும் தோற்றுவிக்கலாம் என்ற எண்ணத்தில் முயற்சிகள் எடுப்பவர்கள் மீது அரசாங்கம் கடுமையாகவிருக்கும் என்று திரு. டுப்செக் எச்சரித்தார். சோவியத் எதிர்ப்புப் பிரசாரமும் நிறுத்தப்பட வேண்டுமென அவர் கூறினார்

நாட்டிலுள்ள வார்ஸோ நாட்டுத் துருப்புக்களைத் தூண்டிவிடும் வகையில், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென்று அவர் மக்களைக்

[7-ம் பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

[illegible] ஆவணி மாதம் 31-ந் திகதி
(16-9-68)


## தமிழரசுக் கட்சி தீர்மானம்

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியினர் விலகுவதெனச் செய்துள்ள தீர்மானம், அரசாங்கத்திற்கு நஷ்டமானதுடன், அரசாங்கத்தின் தேசியத்தன்மையே மாறுவதாக இருக்கும். நாட்டில் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவேண்டியிருக்கும் இச்சமயத்தில் தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்திலிருந்து விலகவேண்டி ஏற்பட்டது துரதிருஷ்டவசமே.

தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்புடன் இந்த தேசிய அரசாங்கம் ஏற்பட்டு மூன்று வருடங்களும் 5 மாதங்களுமாகின்றன. இக்காலத்திலே இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் பல. சமீபத்தில் மாவட்டசபை மசோதாவை பிரதமர் கைவிடுவதென அறிந்ததுமே, தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்திலிருந்து விலகிவிடுவரென்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. பிரதமர் டட்லி ஏற்கனவே அளித்த உறுதிமொழிகளுக்கு மாறாக நடந்திருந்தும் தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்திலிருந்து விலகாமல் தொடர்ந்து ஆதரவளித்து வந்தார்கள்.

ஆனால் இப்போது அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சியினர் விலகுவதெனச் செய்த தீர்மானத்தின் காரணங்களோ மற்றைய விபரங்களோ தெரியவில்லை. திருகோணமலை கோவிலுள்ள பகுதியை புனிதமானதாகச் செய்வதுபற்றி தலத்தாபன அமைச்சர் நியமித்த விசாரணை கமிஷனை நிறுத்தி வைக்கும்படி பிரதமர் டட்லி கேட்டது காரணமாகவே இவ்வித முடிவை தமிழரசுக்கட்சியினர் தீர்மானித்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஏற்கெனவே இவ்வித கமிஷனை நியமிக்க பிரதமர் அனுமதி அளித்தாரா? அனுமதி அளித்திருப்பின், இப்போது அதை நிறுத்தி வைக்குமாறு கேட்டது, முரண்பட்ட செயலாவதுடன், சம்பந்தப்பட்ட அமைச்சரின் தன்மானத்தை அவமதிப்பதாகும். இன்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பிரதமரைக் கண்டு பேசுவதாகத் தெரிகிறது. அவர் தமிழரசுத் தலைவர்களுக்கு என்ன சமாதானம் கூறமுடியும் என்பது தெரியவில்லை.

இது எப்படியாயினும், திருகோணமலை பிரச்சினை, இந்து பௌத்த சமயத் தலைவர்களிடையே நல்லுறவைக் கெடுக்கவோ புதிய வகுப்புவாதத்தைக் கிளப்பவோ அனுமதிக்கக்கூடாது. முன்னர் மொழி வெறியைக் கிளப்பி, தேர்தலில் வெற்றிபெற முனைந்தவர்கள், இனி சமயவெறியைக் கிளப்பிவிட முனையக்கூடும். நாட்டின் மேலான நன்மையில் நாட்டமுள்ள பொறுப்புள்ள தலைவர்கள், இவ்வித நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

திருகோணமலையிலுள்ள கோணேசர் ஆலயம் இந்துக்களுக்கு மட்டுமன்றி பௌத்தர்களுக்குமே புனிதமானது. இரு சமூகத்தவர்களும் எவ்வித வேற்றுமையுமின்றி அங்கு சென்று வழிபடுகிறார்கள். அங்கு மட்டுமல்ல. கதிர்காமம், முன்னீஸ்வரம் உள்ளிட்ட பல இடங்களிலும் இந்த ஆலயங்களில் பௌத்தர் உள்ளிட்ட பல சமயத்தவரும் பக்தியுடன் வழிபடுவதைக் காணலாம். இலங்கையில் பல சமயத்தவரிடமும் ஒற்றுமை ஏற்படுத்தும் புனித ஸ்தலங்களாக இவை விளங்குவது பெருமைப்படத் தக்கதாகும். திருகோணமலை கோவில் பகுதி புனித ஸ்தலமாக்குவது பொதுமக்கள் அனைவருக்குமே நல்லது. எப்படியும் இது காரணமாகக் கொண்டு இந்நாட்டிலே மீண்டும் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட யாவரும் இடமளிக்கமாட்டார்களென்றே நம்புவோம்.

ஆவரங்கால்

## கி. மு. சங்க சிரமதான திட்டங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்
"கிராமமக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக சங்கங்கள் பாடுபடவேண்டும். அரசாங்க உதவியை நம்பியிராது மக்களுக்குத் தேவையானவற்றைச் சிரமதானமுறையில் செய்து முடிக்க எல்லோரும் முன்வரவேண்டும்" ஆவரங்கால் கிராமமுன்னேற்றச்சங்க வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய கிராமஅபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. ஏ. ஜோசெப் கூறினார்.

இக்கூட்டத்தில் சமாதான மன்றம் நிறுவுதல், தொண்டர்படை நிறுவுதல், சேவா நிலையம் விஸ்தரித்தல் போன்ற ஒழுங்குகளை சிரமதான வேலைகள் மூலம் திருத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. சின்னத்துரை, உப தலைவர்: திரு. எம். நல்லையா, செயலாளர்: திரு. எஸ். தம்பிராசா, உபசெயலாளர்: திரு. கே. சுந்தரலிங்கம், பொருளாளர்: திரு. ஏ. திருநாவுக்கரசு. ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.
(ச. தி)

இந்தியாவின்

## இரண்டாவது இருதய மாற்று பொருத்தம்

பம்பாய், செப் 16
கடந்த வெள்ளியன்று, பம்பாய் ஆஸ்பத்திரியில், இந்தியாவின் இரண்டாவது இருதய மாற்றுப் பொருத்தம் செய்யப்பட்டது. ஆனால் சிறுநீரகக் கோளாறு காரணமாக நோயாளி இறந்துவிட்டார்.

## ரூ. 95,000 மோசடி

திருக்கோணமலை, ஞாயிறு
திருக்கோணமலைப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 95,000 ரூபாய் மோசடி நடைபெற்றிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அச்சங்கத்தின் மனேஜர், உதவி மனேஜர் மற்றும் மூன்று உத்தியோகத்தர்களும் தற்காலிகமாக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

# திருமலைச் செய்திகள்

கோணேசர் ஆலயவிவகாரம்:

## "இறுதித்தினத்தில் தந்தி வந்தது"

திருகோணமலை, ஞாயிறு
"ஜனநாயகக் கொள்கைகளுக்கு நேர் விரோதமாக எங்கள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா, திருக்கோணமலையில் பிரட்ரிக் கோட்டை முழுவதையும் புனித நகராக்குவதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டார். அத்துடன் இப்போது புனித நகர் ஆணைக்குழுவும் தற்காலிகமாகப் பின் போடப்பட்டதாக ஒரு தந்தி இங்கு கிடைத்துள்ளது. அதுவும் இவ் விஷயம் பற்றிப் பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களை மகஜர் மூலம் பெறப்பட்டு முடிவடையும் நாள் அன்றே இத்தந்தி கிடைத்திருக்கிறது.

திருக்கோணமலை பிரட்ரிக் கோட்டை முழுவதையும் புனித நகராகப் பிரகடனம் செய்வதற்கு ஆலோசனை பெறுவதற்கெனப் பொதுமக்களுக்கு ஒரே ஆணைக்குழுவை உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் நியமித்தார். இவரின் இந்தக் கோரிக்கைக்கிணங்கப் பொதுமக்களிடமிருந்தும் ஸ்தாபனங்களிடமிருந்தும் 65-க்கு மேற்பட்ட மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. சென்ற செவ்வாய்க்கிழமையே இந்த மகஜர்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்தினமாக இருந்தது. அன்று மாலையே உள்ளூராட்சி அமைச்சிலிருந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், புனிதநகர்ப்பிரகடன ஆணைக்குழுவின் காரியதரிசியுமான திரு. வாமதேவாவுக்குத் தந்திமூலம் ஆணைக்குழுவின் செயலாற்றலை ஒத்திவைத்திருப்பதாகச் செய்தி வந்தது"

இவ்வாறு கோணேஸ்வரர் ஆலயப் பரிபாலன சபைச் செயலாளரும், திருக்கோணமலை நகரசபையின் 4-ம் வட்டார அங்கத்தவருமான வழக்கறிஞர் திரு. பாலசுப்பிரமணியம் தேமிநாதன் தெரிவித்தார்.

### "மீன்பிடிப் படகு அனுப்புக"

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மீன்பிடி ஆலோசனைசபைக் கூட்டத்தில் திருக்கோணமலைப் பிரதிநிதியாகச் சென்ற வழக்கறிஞர் திரு. எம். கே. செல்லராசா திருக்கோணமலையில் நிலாவெளி, குச்சவெளி ஆகிய இடங்களுக்குப் போதியளவு மோட்டார்ப்படகுகள் கிடைக்காததினால் இங்குள்ள மீன்பிடியாளர்கள் பெருத்த அதிருப்தியடைந்துள்ளனர் என்றும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பட்டியலைத் திருத்தியமைத்து உடனடியாக இந்தக் கிராமங்களுக்கு மோட்டார்ப் படகுகளை அனுப்பி உதவுமாறு மீன்பிடி டைரக்டர் திரு. பெர்னாண்டோவைக் கேட்டுள்ளார்.

### 3 மணிநேரம் பஸ்ஸுக்கு நின்றனர்

திருக்கோணமலையிலிருந்து 14 மைல்களுக்கப்பாலுள்ள தம்பலகமம் என்னும் கிராமத்துக்குச் செல்வதற்காக ஒரு நாள் மாலை 5-45 முதல் இரவு 9-45 வரையிலான நாலு மணித்தியாலங்களாக பெண்களும் குழந்தைகளும் உட்படப் பலர் காவல் நின்ற பின்னர் அரசாங்க அதிபரின் உதவியினால் பிரயாணம் செய்தனர். இங்கு பஸ்சேவை மிக மோசமாகிக் கொண்டே வருகிறது. இதுபற்றி நகரசபைத் தலைவர் இ.போ.ச. தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஆகஸ்ட்மாதம் 31-ம் திகதி நடைபெற்ற பிரஸ்தாப சம்பவத்தைக் குறிப்பிட்டு இத்தனை கால தாமதத்துக்குள்ளாகிக் கஷ்டப்படும் பிரயாணிகள் நடந்தோ அன்றி தனியார் வாகனங்களிலோ செல்லவேண்டியிருக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த மோசமான பஸ் சேவையினால் அரசாங்க அதிபரே மனமுடைந்துள்ளதாகத் தெரிகிறது.

### தாமதவேலை?

லங்கா சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டுக்கடங்கிய ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் திருக்கோணமலை துறைமுக வேலைகளில் மெதுவாக வேலைசெய்வதெனத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

### "சமயம் இல்லா வாழ்க்கை...."

"சமயம் இல்லாத வாழ்க்கை சாவுக்கு நம்மை இட்டுச் செல்லும் வாழ்க்கையின் சகல கைங்கரியங்களையும் சரிவரச் செய்ய சமய உணர்ச்சி வேண்டும். பாடசாலைகளில் படிப்பதற்கும் பரீட்சைகள் எழுதுவதற்கு மட்டுமே சமயம் இருப்பதில்லை" என திருக்கோணமலை சிவயோக சமாஜத்தில் அண்மையில் நடைபெற்ற சமய வைபவக் கூட்டத்தின் போது திருக்கோணமலை இராமகிருஸ்ணமிஷன் இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாலன் பேசுகையில் கூறினார்.

பதவிதுறக்கச் செல்லும் அ[illegible]

## மேளதாள[illegible] வழியனு[illegible]

யாழ்ப்பாணம், திங்கள்
"உங்கள் கைகளில்தான் தமிழர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது விழிப்புடன் தொண்டாற்றுங்கள்"

இவ்வாறு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் செனட்டர் திருச்செல்வம்.

நேற்று நண்பகல் இங்கிருந்து விமானமூலம் கொழும்புசென்ற அமைச்சர் திருச்செல்வத்தை வாலிபர்கள் பலாலி விமான நிலையச்சந்தியிலிருந்து மேளவாத்தியங்களுடனும் மூவர்ணக் கொடிகளுடனும் மலர்மாலையிட்டு விமான நிலையத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

மகிழ்ச்சிகரமான கோஷங்களுடன் அமைச்சர் அழைத்து வரப்பட்டபோது உணர்ச்சி வசப்பட்ட பல வாலிபர்கள் கண்களில் கண்ணீர் மல்கியபோதும் சிரிப்பு கலந்த முகத்துடன் அமைச்சரை கட்டிஅணைத்து முத்தமிட்டு உங்கள் கடமையையும் நேர்மையையும் ஒருபோதும் தமிழினம் மறக்காது எனத் தெரிவித்தார்கள்.

அமைச்சபெ[illegible] திரு. திருச்செல்வத்துக்கு இங்கு நேற்று அளிக்கப்பட்ட இப் பிரியாவிடை வைபவத்தில் திருமலை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எம். மாணிக்கராஜா உடுவில் பிரதிநிதி உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கோப்பாய் பிரதிநிதி திரு எம். கதிரவேலுப்பிள்ளை, செனட்டர் எம். நடராசா, உடுவில், மயிலிட்டி கிராமசபைத் தலைவர்களான ச. முத்துலிங்கம் எஸ். கிருஷ்ணசாமி ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கான வாலிபர்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

பாலகன் அலிகான் கொலைவழக்கு

# "2-ம் எதிரியிடம் முதல் சங்கிலியை கொடுத்த[illegible]

## குறுக்கு விசாரணையில் அமீர்சுல்தான் சாட்சியம்

திருக்கோணமலை, ஞாயிறு
கிணற்றுக்கும் வீட்டுக்கும் இடையேயுள்ள வழியில் வைத்து இரண்டாம் எதிரியிடம் தங்கச் சங்கிலியை முதலாம் எதிரி கொடுத்ததைத் தான் பார்த்ததாக, பாலகன் அலிகான் கொலை வழக்கில் முக்கிய சாட்சியான அமீர் சுல்தான் இன்று இரண்டாம் எதிரியின் வழக்கறிஞர் திரு. ஆர். அரங்கநாதன் குறுக்குவிசாரணை செய்தபோது கூறினார்.

பாலகன் அலிகான் கொலை வழக்கு இன்று காலை திருக்கோணமலை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அமீர் சுல்தான் வழக்கறிஞரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

முதல் எதிரியின் வீட்டில் 16ந் திகதி குழந்தையின் சடலம் மூடப்பட்டிருந்ததைக் கண்டேன். அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நான் நிலாவெளிக்குச் சென்[illegible] வந்து 'எங்க வீட்டுப்பிள்ளை' என்ற தமிழ்ப்படம் பார்த்தேன்.

17ந் திகதி நான் பீதி அடைந்திருந்தேன். இரவில் இந்த உபாதையை ஒழிப்பதற்காக கடற்கரைக்குச் சென்றேன். அங்கே ஒரு படகுக்கருகில் இரண்டாம் எதிரியைப் பார்த்தேன். அப்பொழுது இருட்டாக இருந்தாலும், வீதி விளக்கு வெளிச்சத்தில் அவரை அடையாளம் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது.

நான் அச்சமடைந்து முதல் எதிரியின் வீட்டுக்கு ஓடினேன். அங்கு ஓரிடத்தில் படுத்து நித்திரைசெய்[illegible]ந்தேன். சிறிது நேரம் கழித்து, இரண்டாம் எதிரி அங்கு வந்து 'மாப்பிள்ளை' என்று கூப்பிட்டார்.

இதன்பின் கிணற்றுக்கும் வீட்டுக்கும் இடையேயுள்ள வழியில் இரண்டாம் எதிரியிடம் முதலாம் எதிரி சங்கிலியைக் கொடுப்பதைப் பார்த்தேன்.

இச்சம்பவத்தைப் பற்றிப் பயத்தினால் யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் மனதில் இதை வைத்துக்கொண்டிருப்பது பெரும் கஷ்டமாக இருந்ததால் ஹூசெயின் நானாவிடம் சொன்னேன். அவர் எனக்கு உறவில்லையானாலும் அயல்வீட்டிலிருப்பவராதலால் அவரை 'நானா' என்றே நான் அழைப்பதுண்டு. இதன் பின்னர் அவர் பொலிஸாரிடம் சொல்லி அவர்கள் வந்து எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர். இது சம்பவம் நடந்து சுமார் ஒரு வாரகாலத்திற்குப் பின்னர் இருக்கும்.

அடுத்து செய்யது மரைக்கார் சாதிக் என்பவர் சாட்சியமளித்தார். கொடிகாமத்தைச் சேர்ந்த 42 வயதான இவர் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

சம்பவம் [அலிகான் கொலை செய்யப்பட்டது] நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் ஜமாலியா வீதியிலுள்ள சாகுல் ஹமீத் வீட்டில் குடிவந்தேன். எனக்கும் எனது மனைவிக்கு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...லும் அமைச்சரை

# ...தாளத்துடன் ...அனுப்பினர்

வெள்ளை வேட்டியுடனும் மஞ்சள் நிற நாஷனல் ஷேர்ட்டுடனும் தேசிய உடையில் காட்சியளித்த திரு திருச்செல்வம் விமானத்தில் ஏறிநின்று அங்கு நின்ற, வாலிபர்களைப் பார்த்து உங்கள் கைகளில் தான். தமிழினத்தின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது எனத் தெரிவித்தபோது உணர்ச்சிவசப்பட்ட வாலிபர்கள் அவரைப் பார்த்து 'கட்டுண்டோம் பொறுத்திருந்தோம். ஆனால் தமிழினத்தை காட்டிக்கொடுக்கமாட்டோம்'' என்று பதிலுரைத்தார்கள்.

தனது அந்தரங்கக் காரியதரிசியான திரு பாலசுப்பிரமணியத்துடன் அமைதியாக விமானத்துள் சென்ற திருச்செல்வம் கடைசி ஆசனத்தில் ஜன்னல் கரையோரமாக சென்றமர்ந்தார். (ஈ.நி)

## மந்திரிகள் இன்றிரவு கூடுவர்

கொழும்பு, ஞாயிறு இன்றிரவு மந்திரி சபையினர் மிக அவசரமாக கூட இருப்பதாக அறியப்படுகின்றது.

பிரதம மந்திரி நேற்று கொழும்பில் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறிய செய்தி கிடைத்தபொழுது பிரதமர் வெளியூரில் இருந்தார். இன்றிரவு மந்திரிசபையில் மாற்றங்கள் செய்வது பற்றியும் புதிய நிலைமை குறித்தும் மந்திரிகள் ஆலோசிப்பர் என்று தெரிகிறது.

# ...ல் எதிரி ...தார்''

...மிடையில் சண்டை ஏற்பட்டு நான் அந்த வீட்டை விட்டுச் சென்றேன். அப்பொழுது நான் அங்குவிட்டுச் சென்ற சில சமான்களில் இந்த டிரங்குப்பெட்டியும் ஒன்று. ஜூலை மாதம் 22ந் தேதி அமீர் சுல்தான் இந்த டிரங்குப்பெட்டி பற்றி எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்கு நான் பதிலனுப்பியிருந்தேன்.

அடுத்த சாதிக் வசித்த வீட்டின் சொந்தக்காரரும், அமீர் சுல்தானின் தந்தையுமான காசிம் முகம்மது சாட்சியமளித்தார்.

அமீர் சுல்தான் 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேல்விசாரணை இம்மாதம் 26ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ் விசாரணை

# ''ஒன்றுமில்லை போய்ப்படு என்று அம்மாசொன்னர் பின்னர் அம்மாவின் உடலில் இரத்தம்வந்தது''

## புனிதவதி கொலை வழக்கில் மகள் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு ''சம்பவம் நடந்த இரவு எனக்கு முன்னால் நின்ற உருவத்தைத் துரத்திச் சென்றேன். அந்த உருவம் படலையைத் தள்ளிப் பார்த்துவிட்டுப் படலையால் ஏறி விழுந்து ஓடியது. முதலில் அது ஓர் ஆணின் உருவமாகத் தெரிந்தது. தூரத்தும் போது எதிரி மாலனின் உருவம்போல் தெரிந்தது''

தொல்புரம் கொலைவழக்கில், கொலையுண்ட புனிதவதியின் மகள் சிவஞான திரு (வயது 23) சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

தொல்புரத்தைச் சேர்ந்த புனிதவதி என்னும் பெண்ணை 1967ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொலை செய்ததாகக் கிருஷ்ணமூர்த்தி என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஓ. எல். டி. கிறெட்சர் முன்னிலையில் இன்று முற்பகல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. எச். டி. சில்வா கியூ. ஸி., அட்வகேட் ஆர். ஜெ. தம்பிரத்தினத்தின் உதவியுடனும் புறக்டர் ஆர். ஜெ. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

சிவஞானதிரு தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:

சம்பவதினம் நான் படுக்கச் செல்வதற்கு முன் அம்மாவுக்குச் சாரம் கொடுத்தேன். வழக்கமாக இரவில் அம்மா சாரம் அணிவார். அன்றிரவு செம்புச் சத்தம் கேட்டது. எனக்குப் பக்கத்தில் படுத்திருந்த பற்குணதேவியைப் போய்ப் பார்க்கும்படி சொன்னேன். அவர் போய்ப் பார்த்தார். அம்மா அவருடன் கதைத்துக் கேட்டது. பற்குணதேவி போனபோது நான் கதவடிக்குப் போய் நின்றேன். ''என்னம்மா'' என்று பற்குணதேவி கேட்டபோது ''அது செம்புச் சத்தம். பயப்படாமல் போய்ப் படுங்கோ'' என்று கூறினார். அதன்பின் பற்குணதேவியின் கை என் உடம்பில் பட்டது. நான் திடுக்கிட்டு எழுந்தபோது 'சத்தம்'' ஒன்று கேட்டது. ''அம்மாவைக் காணவில்லை. படுக்கையில் தலையணைமட்டும் இருந்தது. நான் அறைப் பக்கம் சென்றபோது ஓர் உருவம் நின்றது. நான் கிட்டே சென்றதும் அந்த உருவம் ஓடிவிட்டது. நான் அதைப் பற்றிப் பற்குணதேவிக்குச் சொன்னேன். பற்குணதேவி 'அம்மாவின் இரத்தம்' என்றதும் நான் ஓடிவந்து பார்த்தேன். ''அம்மா அம்மா'' என்று குழறினேன். தொட்டுப்பார்த்தேன். இரத்தம் இருந்தது. நான் அச்சம் கொண்டு கூச்சலிட்டேன். இதுபற்றிப் பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்.

நீதிபதி: எதிரியை எவ்வளவு காலமாகத் தெரியும்?

சாட்சி: எங்கள் வீட்டுக்கு வந்தது முதல்.

நீதிபதி: அம்மாவுடன் எதிரி பேசும்போது தான் தெரியும்?—ஆம்.

எதிரி வழக்கறிஞர்: நிச்சயமாக எதிரிதான் அவர் என்று உம்மால் சொல்ல முடியாது?—ஆம்.

வழ: முதன்முதலாக மயிலாளத்துடன் வந்தபோது தான் எதிரியைத் தெரியும்?—ஆம்.

வழ, அன்று ஒரேயொரு நாள்தான் எதிரி வந்தவர்?—ஆம்.

வழ: இதற்கு முன் எதிரி ஒடியதை நீர் காணவில்லை?—இல்லை.

வழ: சாம்பு அறைக்குள் இருந்தது?—ஆம்.

விசாரணை தொடர்கிறது.

## மார்கழியில் தமிழரசு மாநாடு

யாழ்ப்பாணம், திங்கள் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் மார்கழி மாதத்தில் நடைபெற விருக்கின்றது.

இம்முடிவு நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

வருடாந்த மகாநாட்டை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காக திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் எம். பி., எஸ். கதிரவேலுப்பிள்ளை எம். பி. செனட்டர் நடராஜா ஆகியோரைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ஈ.நி)

## பிந்திய பதிப்பு

காலையில் வெளிவரும் பத்திரிகைக்குப் பின்னர் நடைபெறும் பிந்திய செய்திகளை உடனுக்குடன் வாசிக்க ஈழநாடு பிந்தியபதிப்பு வாங்குங்கள்.

தினசரி நண்பகல் 12 மணிக்கே ஈழநாடு பிந்திய பதிப்பு யாழ்நகரில் கிடைக்கும்.

## தாலிக்கொடி திருட்டு

உடுவில், ஞாயிறு கலியாணவீட்டுக்கென்று உறவினர் ஒருவரின் வீட்டுக்குவந்து தங்கியிருந்த பெண்ணொருவர் தாலிக்கொடியைப் பறிகொடுத்தார். இச்சம்பவம் ஆனைப்பிலமானிப்பாயிலுள்ள நவாலி என்னுமிடத்தில் நடைபெற்றது.

## மாணவ ஆசிரியர் தி. ச. தீர்மானம்

சாவி, ஞாயிறு 4 வருட காலத்துக்குள் மாணவ ஆசிரியர்கள், பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற உட்செல்லாமலோ ஆசிரியதராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடையாமலோ விடுபவர்களை பதவியிலிருந்து நீக்கிவிடுவதென்ற கல்வி இலாகாவின் தீர்மானத்தைக் கண்டித்து கபறுடை தேர்தல் தொகுதியிலுள்ள கொடகொட கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

குறைந்த சம்பளத்துடன் 4 வருட காலத்திலும் ஆசிரியத்தொழில் அனுபவம் பெறுகின்றனர். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபொழுது எஸ். எஸ். ஸி. தராதர முள்ளவர்களை எதுவித நிபந்தனையுமின்றி போட்டிப் பரீட்சைகள் தன்னுமின்றி கூடிய சம்பளத்துடன் நியமித்தனர். பென்சனும் வழங்கினர். ஆதலால் மாணவ ஆசிரியர்களை பதவியிலிருந்தும் நீக்குவதென்ற முடிவைக் கைவிடவும். இவ்வாறான தீர்மானமொன்று பிரதம மந்திரிக்கு அனுப்புவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

புதிய மண்டபம்

## இன்று திறக்கப்படும்

உரும்பராய், திங்கள் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மண்டபம் இன்று மாலை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

பாடசாலை அதிபர் திரு. வ. நடேசலிங்கம் ஜே. பி.யும் புதிய கட்டடத்தை திரு. மு. பசுபதியும் திறந்துவைப்பார்கள். கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாவின் இறுதியில் கொக்குவில் சாரபவன மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

# கல்விக் காரியாலயம் பற்றி காரமான வாதம்

நல்லூர், திங்கள் நல்லூர் முத்திரைச் சந்தைமைதானத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வடபகுதிக் கல்விக் காரியாலயக் கட்டடத்தை அங்கு அமைக்காமல் வேறுஓர் இடத்துக்கு மாற்றவேண்டுமென நேற்று யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனுக்கும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்துக்குமிடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. திரு. அமிர்தலிங்கமும் வேறு சிலரும் தலையிட்டு வாக்கு வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் டாக்டர் நாகநாதன் தமது பிரேரணையையும் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

கல்விக் காரியாலயத்தை முத்திரைச் சந்தைநிலத்தில் அமைக்கக் கூடாது என்பதற்கு வேறு காரணங்கள் இருக்கவேண்டும் என்றும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி தெரிவித்தார். இதன் பின் வாக்குவாதம் காரசாரமாகி பின்னர் பிரேரணை வாபஸ் பெறப்பட்டு ...

## நாடும் நடப்பும்

புற்றுநோய் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு புற்றுநோய் சிகிச்சைக்குச் சிறந்த சாதனமான 'கோபோல்ட் கருவி' ஒன்றை அனுப்பி வைப்பதற்கு அமைச்சர்கள் பலர் வாக்குறுதி அளித்து வந்தனர். கடைசியாக அளிக்கப்பட்ட 'வாக்குறுதியும்' கடசாற்றில் பறந்துவிட்டதாகத் தகவல் கிடைக்கிறது. இனி எவ்வளவு கிடைக்குமோ?

* * *

அமைச்சர் திருச்செல்வம் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதென்றும் தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறுவதென்றும் தமிழரசுக்கட்சியினர் செய்துள்ள முடிவு பற்றித்தான் இப்பொழுது எங்கு பார்த்தாலும் பேச்சு.

இனி என்ன நடக்கும் என்பது பலர் வாயிலும் எழும் கேள்வியாக இருக்கிறது. சத்தியாக்கிரகம் நடக்குமா, ஆட்சிமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் விரைவில் நடைபெறுமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எப்படியோ விரைவில் பதில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கலாமா?

தேசிய அரசாங்கக் கட்சியிலிருந்து தமிழரசுக்கட்சியினர் வெளியேறியபோதிலும் தமிழ் மக்களுக்குப் பாதகமற்ற விஷயங்களில் அது தொடர்ந்து அரசாங்கத்தை ஆதரித்து வரும். மாவட்டசபைப் பிரச்சினை மற்றும் வேறு பிரச்சினைகளில் தமிழரசுக்கட்சி வெளியேறுமவிருந்ததால் கோணேசரமலைப் பிரச்சினையில் வெளியேறப்போகிறார்களா? என்றுதான் எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்தனர். ஆனாலும் அவர்கள் மட்டுமல்ல மற்றும் பலரும் அரசாங்கமும் கூட எதிர்பாராதவகையில் தமிழரசார் இத்தீர்மானத்தை எடுத்துவிட்டனர்.

ஆளும் கட்சிக் கூட்டுக்குள் தான் பிரச்சினை என்றுஇல்லை எதிர்க்கட்சிக் கூட்டணிக்குள்ளும் யார் யாரை வெளியேற்றுவதென்ற சிக்கல் இருக்கிறதாம்.

தேர்தல்காலம் நெருங்கி வரும்போது அரசியல் கட்சிகளுக்கும் சிக்கல் தோன்றுவதும் அங்கத்தவர் இடை வெளியேறுவதும், உட்பிடிக்கைகள் ஏற்படுவதும் புதிகட்சி தோன்றுவதும் அதிசயமல்ல; ஆச்சரியமுமல்ல.

மந்திரி பதவி இலாபமா, நட்டமா? மாதமொன்றுக்கு பல ஆயிரம்ரூபாய் சம்பாதிக்கும் வழக்கறிஞர் தொழிலை சில வருடங்கள் ஒதுக்கி வைத்துவிடவேண்டிய நிர்ப்பந்தத்தை இந்தமந்திரி பதவி ஏற்படுத்தியதாம் அமைச்சர் பதவி துறக்கும் திருச்செல்வத்தாருக்கு.

இனிநிம்மதி. அவரைக் கோட்டடியில் காணலாம்.

—ஊர்சுற்றி

## திருவிழா

உடுவில், ஞாயிறு உடுவில் வெங்கடேசப் பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகத்தின் ''பக்த அருணகிரிநாதர்'' கதாப்பிரசங்கம், வல்வெட்டித்துறை விஜயன் கோஷ்டியினரின் இன்னிசை, மற்றும் நாதஸ்வரக்கச்சேரி, காவடி, செம்பு நடனம், தீப நடனம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆசிரியர் சங்கக் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

1968-ம் ஆண்டின் ஆரம்பத்தில் பெருந்தொகையான ஆசிரியர்கள் வடபிரதேசத்திலிருந்து பிற இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை இடமாற்றம் இடமாற்றங்களாக நடக்கக்கூடாது என நாம் ஆட்சேபித்தோம். மாவட்ட ரீதியிலேயே ஆசிரியர் நியமனம், இடமாற்றம் ஆகியன நடைபெறல் வேண்டும் என நாம் கல்வி இலாகாவை வேண்டியதை பல தேசிய தினசரிகளும் திட்டவட்டமாக எடுத்துக் கூறின.

இவ்வாறு வடமாகாண ஆசிரிய சங்கத்தின் ஐம்பத்திமூன்றாவது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய சங்கத்தின் 12 அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய 14 பிரேரணைகளை ஆசிரியர்கள் மத்தியில் பிரசாரம் செய்து கூடிய ஆதரவைப்பெற 98 பாடசாலைகளுக்கு அனுப்பியிருந்தபோதும் 87 பாடசாலைகளிலிருந்து மட்டுமே பதில் கிடைத்ததாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான போதனமொழி, இடமாற்றப் பிரச்னை ஆகியன பற்றிய விபரங்கள் கொண்ட இவ்வறிக்கையில் வருடாந்தப் போட்டிகளின் முடிவுகளும், 12 அம்சக் கோரிக்கைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## இன்றைய பலன்

16-9-68

ஆவணி

31உ திங்கட்கிழமை

திதி- நவமி. பகல் 3-54 மேல் தசமி.

நட்சத்திரம்- திருவாதிரை. இரவு 8-07 மேல் புனர்பூசம்.

ராகுகாலம்- 7-33—9-03.

சுபநேரம்- 12-03—1-33.

இன்று பிறந்தவர்களுக்கு- நீண்ட நாள் புதிருக்கு இவ்வாண்டு விடை கிடைக்கும். கடமையாற்றும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். இவருக்கு புதிய தொழில் வாய்ப்புக் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கதை கட்டுரை எழுதுபவர்களுக்குப் புகழும், புதிய உற்சாகமும் பிறக்கும். வாகனச்சாரதிகள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவும். கடல் நீராடல், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். பெண்களாயின் மௌனமே அருமருந்தாகும்.

மேஷம்- கலகலக்கும் பணம், சலசலக்கும் வாழ்வு.

ரிஷபம்- எதிர்பாராத தடை, பணமுடை.

மிதுனம்- பிணி வரும் கவனம், சுகாதாரம் வேண்டும்.

கடகம்- வாக்கில் வசீகரம், வழக்கில் வெற்றி.

சிம்மம்- இரும்பு மனம் இருண்ட வாழ்வு.

கன்னி- திடீர் திருப்பம், திரவிய இலாபம்.

துலாம்- மனம் போல் வாழ்வு, சிறப்பான நாள்.

விருச்சிகம்- காரியத்தில் கண்ணை, கலகம் பிறக்கும்.

தனுசு- கனிவான நினைவு, காதலில் வெற்றி.

மகரம்- முன்னேற்றம் தடைப்படும். விரக்தி நிலை

கும்பம்- மக்கள் ஆதரவு, தலைமைப் பதவி.

மீனம்- காரிய ஜெயம் கவனமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமயிலை வேலுப்பிள்ளை

## மின்சாரம் கிடைக்கவில்லை

### பணம் செலுத்தி 3 ஆண்டுகள்

அராலி, ஞாயிறு

அரசாங்க கிராம மின்சக்தி விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வீட்டுத் தேவைகளுக்கு மின்சாரம் பெற விரும்புவோர் சுன்னாகம் மின்சார நிலைக் காரியாலயத்தில் ரூ. 60 முற்பணம் கட்டவேண்டுமென அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்சாரம் பெறவிரும்பிய இப்பகுதி மக்கள் பலர் முற்பணம் கட்டியிருந்தனர். முற்பணம் கட்டி 3 வருடங்களாகியும் இதுவரை அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. கிராம மக்கள் மத்தியில் இதுபற்றிப் பலத்த அதிருப்தி நிலவுகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 16-9-68

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்மேடை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 ஜலதரங்கம், 6-45 மாணவம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 வாத்தியஇசை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 [illegible] உரைச்சித்திரம், 9-45 நேயர் விருப்பம்.

## ஒரு குழந்தை பலி

### முளாய்ப் பகுதியில் குழந்தை நோய்

சுழிபுரம், ஞாயிறு

முளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வயிற்றோட்ட வியாதி காரணமாக அநேக குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களாகக் குழந்தைகளிடையே நோய் பரவிவருவதை இப்பகுதியிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் காணமுடிகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்ட மூன்று தினங்களில் மரணமானது.

## கூட்டுறவு மகாநாடு

உடுப்பிட்டி, ஞாயிறு

வடபகுதி ஐக்கிய விற்பனவுச் சபையின் வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் வடபகுதியைச் சேர்ந்த பல கூட்டுறவுச் சங்கங்கள் கலந்துகொள்ளும்.

## 'தபால் நிலையத்தை தரம் உயர்த்துக'

கோப்பாய், ஞாயிறு

தற்போது கோப்பாயிலுள்ள தபால் நிலையத்தை 1-ம் தரத்திற்கு உயர்த்தி அதற்குரிய வேலைநேரத்தை காலை 7 மணி முதல் மாலை 8 மணிவரையாக மாற்ற வேண்டுமெனவும், இந்நிலையத்தின் தபால் விநியோகம் 5 மைல் சுற்றளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் இப்பகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளையிடம் கோரியுள்ளனர்.

## இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு

[illegible] ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. இ. மாணிக்கம் பணிப்புலம் காலையடி அ. மி. பாடசாலைக்கு இம் மாதத்திலிருந்து மாற்றலாகியுள்ளார்.

## 2 வருடமாகியும் நடவடிக்கை இல்லை

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரி முன்புறத்தில் சென்றவருடம் இரு புதிய வார்ட்டுகளுக்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்டும் இன்னும் எதுவித நடவடிக்கையும் சுகாதார இலாகா மேற்கொள்ளவில்லை. இதுபற்றி டாக்டர்கள் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## மோட்டார்வாகன இறக்குமதிக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஞாயிறு

லொறிகள் மற்றும் விவசாயத் துறையில் தேவைப்படும் டிராக்டர்கள் ஆகிய மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கிருக்கும் கட்டுப்பாட்டை தளர்த்தி இங்கு தேவையானவற்றைப் படிப்படியாக இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அங்கீகாரமளிக்கவிருக்கிறது.

இது விவசாயத்துறைக்கு மேலும் ஊக்கமளிப்பதாக இருப்பதோடு உணவுப் பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்ற இடத்துக்கு எடுத்துச் செல்ல உதவுவதோடு இதனால் உணவுப் பொருள்களின் விலை உயர்வைத் தடுக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுவதாலேயே இவ்வித மோட்டார் வாகனங்களை இங்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ள நிவாரணம்

ஊர்காவற்றுறை, விசே.

சென்ற ஆண்டு இறுதியில் நடைபெற்ற வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட வேலணை கிராமப் பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. சமூகசேவைப் பகுதி [illegible] வெள்ள நிவாரணப் பணத்தை வழங்கினர்.

கிளிநொச்சி

## பொலிசுக்கு எதிராகப் புகார்

பருத்தித்துறை, ஞாயிறு

கிளிநொச்சியைச் சேர்ந்த ஆலவாப்பிலுள்ள கந்தசாமி என்பவரது வீட்டுக்குள் கிளிநொச்சிப் பொலிசார் இரவு நேரத்தில் அத்துமீறிப் பிரவேசித்து தாக்கியதாகவும் அவரை சட்டத்துக்குமாறாக பாதுகாப்பில் வைத்திருந்ததாகவும் ஐ. ஜீ. பிக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. இவ் விஷயம் கிளிநொச்சி எம்.பி. திரு. வீ. பொ. இரத்தினத்துக்கும் உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நேர்முகப்பரீட்சை இம் மாதம் நடக்கும்

காங்கேசன்துறை, ஞாயிறு

புகையிரதப் பாதுகாவலர் பகுதியில் களவு, கொலை பலாத்காரச் செயல்களை தவிர்க்கும் நோக்கத்துடன் இலங்கை புகையிரத இலாகா ஆட்களைச் சேர்க்கவிருக்கிறது. இப்புதிய பதவிகளுக்கு சென்றவருடம் அரசாங்க வர்த்தமானி மூலம் விண்ணப்பம் கோரியும் இதுவரை நேர்முகப் பரீட்சைகள் நடைபெறாதிருந்தது.

இதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் இம் மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

பருத்தித்துறை

## ஆஸ்பத்திரி சீரமைப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

நோயாளர் நெருக்கடியை தீர்க்குமுகமாக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு பெண் டாக்டர் உட்பட சில டாக்டர்கள் தருவிக்கப்பட்டுள்ளனர்.

தாதிமார் தொகையும் அதிகரிக்கப்படவிருக்கிறது. வெளி நோயாளருக்கென இரு மேலதிக வைத்தியர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

## பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம்

காங்கேசன்துறை, ஞாயிறு

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் நடைபெறவிருக்கின்றன. 18-ம் திகதி விவசாய போதனையின் திறனுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் நடைபெறவிருக்கிறது.

அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் இக்கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் அதிபர் பதவிக்கு வடபகுதியிலுள்ள அநேக கல்லூரி அதிபர்களிடையே போட்டியிருப்பதாகத் தெரிகிறது.

## கல்வித் திணைக்களத்தின் திட்டம்

சங்கானை, ஞாயிறு

கல்வித்திணைக்களம் பாடப் பதிவுப் புத்தகங்களை அச்சிட்டு எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. அரசாங்கம் அனுப்பும் இப்பதிவுப் புத்தகங்களில் ஆசிரியர்கள் தினமும் பாடப் பதிவுகளை எழுத வேண்டுமாம். ஆசிரியர்கள் வேலையைக் கண்காணிக்க இவை பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே சிங்கள பாடசாலைகளுக்குரிய இப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், விரைவில் தமிழிலும் இவை தயாரிக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

## சிரமதான மூலம் தெருவேலை பூர்த்தி

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு கோயில் குடியிருப்பையும் சின்னாற்றுக் கிராமத்தையும் இணைத்திருந்த நீர்ப்பாசன இலாகாவின் அணைக்கட்டை விஸ்தரித்துச் சிரமதான மூலம் ரோட்டை அமைத்து வெற்றி காணலாம் என மக்களுக்கு எடுத்துரைத்ததுடன் மட்டுமின்றிப் பிரமுகர்களிடம் நன்கொடைப் பணம்பெற்று சிரமதானம் மூலம் தெரு அமைத்து முடித்தார் முல்லைத்தீவுக்காரியாதிகாரி திரு. செ. கணேசநாதன்.

இருநாட்களாக ஆண்களும் பெண்களுமாக நூற்றுக் கணக்கில் பங்குபற்றி இறுதி வேலைகளைச் சிரமதானப் பணியில் செய்தனர். முல்லைத்தீவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பீ. லோ. அருள்நாயகம், கிராம சேவையாளர் திரு. பொ. திருநாவுக்கரசு ஆகியோரும் இரவுபகலாக இப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த அணைக்கட்டு 40 வருடங்களுக்குமேலாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது குறிப்பிடத்தக்கது. விரைவில் இந்த அணைக்கட்டுத் தெரு வவனியா மாவட்ட அதிபர் திரு. பி. ஸ்ரீ. டெரோராவினால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வலி-வடக்கு

## கலைமன்றம் உதயம்

அளவெட்டி, ஞாயிறு

"சனசமூக நிலையங்களும் சமூக சேவையும்" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கு ஒன்றை அடுத்த மாதம் 5-ந் திகதி வலி வடக்கில் நடாத்துவதென வலி வடக்கு சனசமூக நிலையங்களின் சமாசம் முடிவு செய்துள்ளது.

வலி-வடக்குக் காரியாதிகாரி காரியாலயத்தில் திரு. வி. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற சமாசக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

வலி-வடக்குப் பகுதியில் கலையை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக வலி-வடக்கு சனசமூக நிலையங்களின் சமாசம் ஒரு கலைமன்றத்தையும் நிறுவியுள்ளது.

திரு. ஏ. மீ. பொன்னுத்துரை, பண்டிதர் க. சோ. ஆதிநாதன், திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம், திரு. மு. செல்வராசா ஆகியோர் மன்றக் குழுவினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கனகராயன்குளம் மகாவித்தியாலயம்

சங்கானை, ஞாயிறு

கனகராயன்குள மகாவித்தியாலயத்தை விஸ்தரிப்பதற்குரிய வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரால் நிறுவப்பட்டபுதிய வகுப்பறைகளைப் பூரணமாக்கி வகுப்புகள் அங்கு நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கதிரைகள் இல்லாது தரையில் இருந்து படித்த பாலர் வகுப்பு மாணவர்களுக்கு புதிய கதிரைகள் மேசைகள் வழங்கப்பட்டுள்ளன. மலசல கூடம் அமைப்பதற்கான வேலையும் தொடங்கப்படவிருக்கின்றது.

புதிய விளையாட்டு மைதானமொன்றையும் உருவாக்கி விரைவில் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்துவதற்கு அதிபர் திரு. மு. சிவானந்தம் பெற்றோர் பழையமாணவர் ஆகியோரது உதவியை நாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு கரவை வல்லுவர் மன்றத் தினரின் 25வது ஆண்டு விழாவையொட்டி அடுத்த வாரம் இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியும், டிராக்டர் இயந்திரப் போட்டியும் நடைபெற விருக்கிறது. இவ்விழா வட மராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

## பிரிட்டனுடன்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரொடீஷியாவில் பெரும் பான்மை அரசுக்குவழிவகுக் கதான பாதையில் ஏதாவது முன்னேற்றமான நடவடிக் கையில் திரு. ஸ்மித் இறங்கி னாலன்றி, இவ்வித பேச்சு வார்த்தைகளில் பயனில்லை என்றும் அப் பேச்சாளர் கூறினார்.

## மாஸ்கோ...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கேட்டுள்ளார்.

நாட்டின் உள் விவகாரங் களில் தலையிடுவதில்லை என்று வார்ஸோ ஒப்பந்த நாடுகள் உறுதியளித்திருப்ப தாகவும் திரு. ருப்ஜெக் தெரிவித் தார்.

## இடமாற்றம்

காங்கேசன்துறை, ஞாயிறு மயிலிட்டி கிராமசபையில் விதாரனைக் கடமையாற் றிய திரு ஆர். பரமேஸ்வ ரன் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து கல்முனைப் பட்டினசபைக்கு இடமாற் றம் செய்யப்பட்டுள்ளார்.

## பரிசு பெற்றனர்

### கவிதை, கட்டுரை போட்டிகளில்

வெள்ளவத்தை, ஞாயிறு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய பாரதிவிழாப் போட்டிகளின் முடிவுகள்

**கவிதைப்போட்டி**

முதற்பரிசு (தங்கப்பதக் கம்) திருமதி பரிமளா இரா ஜதுரை [சுளுவாஞ்சிக்குடி]. இரண்டாவது பரிசு [வெள் ளிப்பதக்கம்] செல்வி நா. சிவராசலிங்கம். மூன்று வது பரிசு [நூல்கள்] காரை செ. சுந்தரம்பிள்ளை [அல் வாய்].

**கட்டுரைப்போட்டி**

முதற்பரிசு [தங்கப்பதக் கம்] செல்வி பூரணம்மா பொன்னையா, (செட்டிபாளை யம்) இரண்டாவது பரிசு [திரு. க. பேரம்பலம் நெல்லை க. பேரன் [நெல்லி யடி] மூன்றாவது பரிசு திரு. மு. இராசேஸ்வரன் [காங்கேசன்துறை].

# திருமலை விளையாட்டு செய்திகள்

மூதூர்ப்பகுதி கிராம சேவையாளர்கள் குழுக்கள் இடையேயான கரப்பந்தாட்ட விளையாட்டுப்போட்டி யில் கட்டைபறிச்சான் கிராம வீரர்கள் மூதூர்க் கிராம வீரர்களை தோற்கடித் தனர். திரு. எம். டி. திருவைபூரணம் மத்தியஸ் தம் வகித்தார்.

0 0 0

மற்றுமொரு போட்டி யில் கட்டைபறிச்சான் கிராம வீரர்கள் இலிவெட்டிக் கிராமவீரர்களை தோற்கடித் தனர். இப்போட்டிக்கு திரு. எம். காரலிங்கம் மத்தியஸ்தராகக் கடமை யாற்றினார்.

0 0 0

தோப்பூர் கிராமவீரர் கள் தெஹிவத்தைக் கிராம வீரர்களை வெற்றியீட்டினர். மூதூர் வீரர்கட்கும் தெஹி வத்தை வீரர்கட்குமிடையே நடைபெற்ற போட்டியில் மூதூர் வீரர்கள் வெற்றி யீட்டினர். போட்டிகளுக்கு திரு. எம். அஸனார் மத்தி யஸ்தம் வகித்தார்.

0 0 0

விளையாட்டு உத்தியோ கத்தர் திரு. எஸ் டி. திரு வைதாஸகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கரப்பந்தா ட்டப்போட்டிகளுக்காக 6 விளையாட்டுக் கழகங்கள் தோற்றுகின்றன. இப் போட்டிகளின் இறுதி ஆட் டம் இன்று நடைபெறவிருக் கிறது. இந்த இறுதி ஆட் டத்தில் வெற்றி பெறும்வீரர் கள் அரசாங்க அதிபர் அறை கூவல் கேடயத்துக்கான போட்டியில் பங்குகொள் வத் தகைமையடைவர்.

0 0 0

டில்லிமாநகர நூல்நூற் பாவர் விளையாட்டுப்போட் டிகளில் பங்குபெறவென திருக்கோணமலை உதைபந் தாட்டக் கழகம் விரைவில் திருக்கோணமலையிலிருந்து விளையாட்டு வீரர்களை டில் லிக்கு அனுப்பிவைக்கவிருக் கிறது. இப்போட்டிகள்புது டில்லியில் இவ்வருடம் அக் டோபர் மாதத்தில் நடை பெறவிருக்கின்றன.

## உதைபந்தாட்டம்

உடுவில், ஞாயிறு சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரி மாணவருக் கும், சுன்னாகம் இளந்தென் றல் மன்றத்தினருக்குமிடை யே அண்மையில் நடை பெற்ற சிநேகபூர்வமானஒரு உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடி வடைந்தது.

இரு கோஷ்டியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக்கொண்டனர். சுன் னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்வுதை பந்தாட்டப் போட்டிக்கு திரு. சி. தியாகராசா மத் தியஸ்தம் வகித்தார்.

## வருடாந்தக்கூட்டம்

சுழிபுரம், ஞாயிறு வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்க வரு டாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. க. கந் தசாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. சங்கத் தைத் தொடர்ந்து நடத்து வதற்கான வழி வகைகளும் ஆராயப்பட்டன. கூட்டு றவு உதவி ஆணையாளர் கூட் டுறவுப் பரிசோதகர் ஆகி யோரும் கலந்துகொண்டனர் புதிய அதிகாரசபை தெரிவு செய்யப்பட்டது.

## 'மக்கள் கவிஞராக வாழ்ந்தவர்'

யாழ்ப்பாணம், திங்கள் மக்களுக்காகப் பாரதி கவிதை பாடினார். மக்கள் கவிஞராக வாழ்ந்தார். அத னால்தான் பாரதிக்கு மக்கள் விழா எடுக்கிறார்கள். என கண்டிக்குழி பெண்கள் அறி விவல் மன்றத்தினர் கொண் டாடிய பாரதி விழாவில் பேசிய மானிப்பாய் கிராம சபை உறுப்பினர் திரு சி. இராசதுரை குறிப்பிட் டார்.

திருவாளர்கள் டொமி னிக்ஜீவா, இ. நாகராஜன் பிலிப் அருளையா ஆகியோ ரும் பேசினர். இசைநிகழ்ச்சி களும் நடனங்களும் விழா வில் இடம்பெற்றன.





# இன்றைய விலைமதிக்கமுடியாத பரிசு: புத்தம் புதிய கார்

என்றாலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகை யான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினுல் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

சீட்டிழுப்பு இல. 212. தேதி: 19-9-68
புத்தம் புதிய ஹில்மன் ஹண்டர் கார்
ரூபா 20,250/-*



சீட்டிழுப்பு இல. 213, தேதி: 26-9-68
புத்தம் புதிய இஸுஸு பெலட் கார்
ரூபா 15,225/-*



* இவை தீர்வை உட்பட்ட கம்பனி பட்டியல் விலைகளாகும்.

✱ இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட் கள்வரை மட்டுமே வழங்கப்படும்.

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!

AJNb.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

